இருக்கிறார்கள். அந்தச் சம்பள விகிதங்கள் வரைமுறை படுத்தப்பட்டு, ஒழுங்கு படுத்தக் குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. குழு ஆராய்ந்து தந்த அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 318, 319, 320, 321, 322 ஆகியவை பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

Loan scholarships to students of Veterinary College.

*323 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether loan scholarships have been discontinued for the students of the Veterinary College from this year; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

மாவட்ட அளவில் சிறு தொழில்களுக்கான குழு

*324 வினா—திரு. சு. துரைசாமி:
திரு. கே. விநாயகம்: } மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில்களுக்கு உதவ மாவட்டந்தோறும் ஆலோசனைக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) சிறு தொழில்கள் நிறுவுவது குறித்து மாவட்டங்களிலுள்ள பல்வேறு அதிகாரிகளால் ஒப்புதல் வழங்குவதிலும், உரிமம் வழங்குவதிலும் ஏற்படுகின்ற காலதாமதத்தைக் கண்டுபிடித்து நீக்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், அரசுச் சார்புள்ளவர்களையும், அரசுச் சார்பற்றவர்களையும் உறுப்பினர் களாகவும் கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்றை அமைக்குமாறு தொழில் துறையின் (சிறப்பு) 13-5-1970-ம் நாளிட்ட 1125-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலை நிறுவுவது குறித்துப் பெறப்பட்டுள்ள மனுவின் பேரில் இரண்டு வாரங்களுக்கும் மேலாக முடிவு ஏதும் எடுக்காமல் இருக்கிற மாவட்ட துறை அதிகாரி, ஒவ்வொரு வரும், அக்காலதாமதத்திற்குச் சரியான விளக்கத்துடன் மேற்சொன்ன குழுவின் நாட்டத்திற்கு அதைக் கொண்டுவருவதற்குப் பொறுப்பாளியாவார். பாதிக்கப்பட்ட தொழில் முனைவர்களும், காலதாமதமான நேர்வுகள் குறித்து நேரடியாக இக்குழுவின் தலைவருக்கு எழுதலாம்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, தொழில்களைத் துவக்கும் நேரத்தில் தொழிற்சாலைச் சட்டத்தின் அடிப்படையில் சில விதி விலக்குகள் தரவேண்டும். தொழிற்சாலை துவக்குகிற நேரத்தில் தொழிற் சாலைச் சட்டத்தின் அடிப்படையில் எதேனும் சிறிது சலுகை அக்குழு சிபார்சு செய்தால், அதை விலக்க அந்தக் குழுவுக்கு அதிகாரம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டத்தில் விதிவிலக்கு அளிப்பது அரசாங்கத்தின் வேலை. அரசாங்கத்திற்குக் குழு சிபார்சு செய்தால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas the initiative to start Small-scale Industries in our State is becoming very slimmer and slimmer and whereas there is no improvement in the industrial advance of our State, what concrete steps do the Government propose to take to accelerate the economic improvement of our State instead of constituting Advisory Committees which would do only more paper work?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டில் சிறு தொழிற்சாலை வளர்ச்சி இல்லை என்று கனம் அங்கத்தினர் முடிவுக்கு வந்து கேட்டு விட்டார்கள். ஆனால் எங்கே பார்த்தாலும் எல்லா அமைச்சர்களும் தமிழ் நாட்டிலேதான் அதிகமாகத் தொழில் தொடங்க உரிமம் பெற்று வருகிறீர்கள் என்று சொல்லி வருகிறார்கள். இப்போது இந்தக் குழுவின் பொறுப்புக் காலதாமதம் ஆவதைத் தவிர்ப்பதற்காக ஒவ்வொரு சிறு தொழிற்சாலையும் எந்தெந்த மாவட்டங்களில் கிராமங்களில் ஏற்படுகிறதோ, அதில் காலதாமதத்தை தவிர்த்து அந்தத் தொழில் அதிபர்களுக்கு உதவி செய்ய ஆரம்பிக்கப்படுகிறது. புதிய தொழில்கள் ஏராளமாகத் தொடங்குவதற்குப் பல வித உதவிகள் தரவேண்டும். மின்சாரம் தருவது, தண்ணீர் வசதி அளிப்பது, நிலம் ஆர்ஜிதம் செய்து தருவது இதுபோன்ற வசதிகளை "infra-structure for Industrial Development" என்று சொல்வார்கள். அதை மாநில அரசு செய்கிறது. அதை செய்யத் தவறியதாக யாரும் சொல்லவில்லை. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் சிறு தொழில்கள் ஒவ்வொரு ஆண்டும் அதிகமாக ஆகிறது. இதை நாட்டு மக்கள் நம்புகிறார்கள். நண்பர் விநாயகம் மட்டும் நம்ப மறுக்கிறார்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether all the districts in our State are having Small-scale Industries Advisory Committees?

THE HON. THIRU S. MADHAVAN : Yes, Sir.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, இந்தச் சிறு தொழில் ஆரம்பிப்பதில் இருக்கும் கஷ்டமெல்லாம் மாவட்ட சுகாதார அதிகாரியிடத்தில் அனுமதி பெறுவதிலும், மின்சார வாரியத்தில் அனுமதி பெறுவதிலும் மிகவும் சிரமமாக இருக்கிறது. இதைத் தளர்த்தி பஞ்சாபில் ஒரு சட்டம் கொண்டுவந்து இருக்கிறார்கள். அதைப்போல் இங்கேயும் தளர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்காகத்தான் அந்தந்த துறையைச் சார்ந்த மாவட்ட அதிகாரிகளை அந்தக் குழுவில் அங்கத்தினராக நியமித்து இருக்கிறோம். மாவட்ட சுகாதார அதிகாரி இருக்கிறார். மின்சார வாரியத்தைச் சேர்ந்த மாவட்டப் பொறியாளர் இருக்கிறார். பாக்டரி சட்டத்தில் இருக்கும் சங்கடங்களைப் போக்கி அனுமதி தருவதற்காக பாக்டரி இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அவர்கள் எல்லாம் இருந்து பார்க்கிறார்கள். அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் சட்டங்கள் மிகவும் கடினமாக இருக்கின்றன என்ற

1970 செப்டம்பர் 9]

காரணத்தால் சிறு தொழில் ஆரம்பிப்பதற்கு கொஞ்சம் தயக்கம் ஏற்படுகிறது. இந்த உண்மையை அரசாங்கம் உணருகிறது, இதைப்பற்றி என்ன முடிவு செய்யலாம் என்று Small Scale Industries Advisory Board சில ஆலோசனைகளைக் கூறி இருக்கிறது. அந்த ஆலோசனைகளை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

திரு. கே. என். குமாரசுவாமி: தலைவரவர்களே, இந்த சிறு தொழில் என்னென்ன ஆரம்பிக்கலாம் என்பதற்காக பட்டியல் இருக்கிறதா? அந்த பட்டியலில் உள்ள தொழில்கள் ஆரம்பிப்பதற்காக மூலப்பொருள்கள் தமிழ் நாட்டில் கிடைக்கிறதா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பட்டியல் ஏற்கெனவே இருக்கிறது. அது மத்திய சர்க்காரில் இப்படி இப்படி என்று வகுத்து இருக்கிறது. மூலப் பொருள்களைப் பொறுத்தவரையில் அதைக் கொடுக்கும் சக்தி மாநில அரசுக்கு இல்லை. நேற்றுக்கூட நான் சிறு தொழில் அதிபர்களை அழைத்து புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காகத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்ட போது அவர்கள் நாங்கள் தொழிற்சாலை ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் மூலப்பொருள்கள் தேவை என்று சொன்னார்கள். இன்னும் பல்லாயிரக்கணக்கான இன்ஜினியர்கள், டிப்ளமா ஹோல்டர்கள், கிராப்ட்ஸ்மேன் ஐ.டி.ஐ. பயின்றவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள முடியும், அதற்குத் தயாராக இருக்கிறோம். தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள்களைத் தர தயாராக இருக்கிறீர்களா என்று கேட்டார்கள். நான் பதில் சொல்லவில்லை. அந்த அதிகாரம் என்னிடத்தில் இல்லை. நாங்கள் அதற்காகத்தான் 12, 13 தேதிகளில் மாநாடு நடத்துகிறோம். அங்கத்தினர் அங்கு வந்து நல்ல யோசனைகளைக் கூறலாம்.

சிறு தொழில் துவக்குவது குறித்துப் பயிற்சி.

*** 325 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் சிறு தொழில் துவக்குவது எப்படி என்பதைச் சொல்லித்தர ஓர் நிலையம் துவங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தொழிலில் முனைபவர்களுக்குப் புதிய வகையில் தொழில் துவக்குவது, புதிய தொழில் பிரிவுகள் துவக்குவது, அவற்றை ஏற்படுத்தக்கூடிய இடம், ஆகியவற்றைப்பற்றி தொழில் வணிகத் துறை தற்போது அறிவுரை வழங்குகிறது. சென்னையிலுள்ள சிறு தொழில் பணிமனை நிறுவனமும் Small Industries Service Institute சிறு தொழிற் பிரிவுகளுக்கு நவீன தொழில் நுட்ப முறைகளைப்பற்றியும், நவீன யந்திரங்களையும், கருவிகளையும் பயன்படுத்துவதைப்பற்றியும் அறிவுரை வழங்குதலுடன் செய்முறையிலும் அறிவுரை அளித்து வருகிறது. புதியதாக நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு சிறு தொழில் முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள்களில் ஒன்று, மாநிலத்தில் கூடுதல் சிறு தொழில்கள் ஏற்படுவதற்கு வேண்டிய வழிவகைகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் தொழில் துவங்க முனைபவர்களுக்கு தொழில் நுணுக்க உதவிகள் அளித்தல்.